# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/45 - 2022 ජනවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.13

*2262/45 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை அதிபர் சேவை, ஆசிரிய ஆலோசகர் சேவை மற்றும் இலங்கை ஆசிரிய சேவைகளை வரையறை சேவைகளாக மாற்றுதல்**

*இலங்கை அதிபர் சேவை, ஆசிரிய ஆலோசகர் சேவை மற்றும் இலங்கை ஆசிரிய சேவைகளை 2021.08.30 ஆந் திகதி முதல் அமுல்படுத்தும் வகையில் பின்வரும் விதிமுறைகளுக்கமைய வெவ்வேறாக மூன்று வரையறை சேவைகளாக மாற்றப்படும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணக்கத்தின்படி.*

பேராசிரியர் **கே. கபில சீ. கே. பெரேரா,**
*செயலாளர்,*
*கல்வி அமைச்சு.*

*கல்வி அமைச்சு,*
*இசுருபாய,*
*பத்தரமுல்ல,*
*2022, சனவரி 12.*


1A – G 35827 – 45 (2022/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***01. அமுலாகும் திகதி***

*இந்த சேவைகளை வரையறை சேவைகளாக மாற்றுதல் 2021.08.30 ஆந் திகதி முதல் அமுலாகும்*

***02. நியமிக்கும் அதிகாரி***

*நியமித்தல், பதவியுயர்வு, ஒழுக்காற்று இடமாற்றம் மற்றும் ஏனைய நிறுவன செயற்பாடுகள் தொடர்பான அதிகாரம் மற்றும் விதிமுறைகள் அந்தந்த சேவைகள் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ளவாறு எதிர்காலங்களிலும் செயல்படும்.*

***03. சம்பளம்***

*அந்தந்த சேவைகளுக்கு தனித்துவமான சிறப்பு சம்பள கட்டமைப்புகள் தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் வினவப்பட்டு பொருத்தமான விதத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

***04. பதவிகள், சேவை எண்ணிக்கை, தரங்கள், சேவைக்குரிய பதவிகளின் எண்ணிக்கை, உள்ளீர்ப்பு மற்றும் பதவியுயர்வு செய்தல்.***

*சேவை எண்ணிக்கை, தரங்கள் மற்றும் பதவிகள் தொடர்பாக உரிய அதிகாரிகளினால் அனுமதிக்கப்பட்ட புதிய விதிமுறைகளுக்கு அமைவான சேவை பிரமாணக்குறிப்பு உருவாக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் வரை அச் சேவைகளுக்காக தற்போது நடைமுறையிலுள்ள சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைகள் உரித்தாகும்.*

EOG *01 - 0151*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*